1972 மார்ச் 17]

சட்டக் கல்லூரி மாணவர்களுக்குப் புதிய விடுதி

* 528 வினு—திரு. க. சுப்பு: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போதிய வசதி இன்மையால் தங்களுக்கு புதிய விடுதி ஒன்றைக் கட்டித் தருமாறு சென்னையிலுள்ள சட்டக் கல்லூரி மாணவர்கள் கோரியிருக் கிருர்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தற்பொழுது உள்ள சட்டக் கல்லூரி விடுதிக் கட்டிடத்தையும் இடத் தையும் விலைக்கு வாங்கி விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு அரசாங் கம் இந்தப் பதிலையே வெகுகாலமாகச் சொல்லி வருகிறது என்கிற அதிருப்தி மாணவர்கள் மத்தியில் இருக்கிறது. ஆகவே உடனடியாக அந்த இடத்தை வாங்கி கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்கான முயற்சிகள் செய் யப்பட்டுவிட்டன. அந்த இடத்தை கையகப்படுத்துவதற்குக் காலதாமதம் ஆகலாம் என்றே அந்த இடத்தை வாங்கிவிடுவதற்காக வாங்கி கட்டிடங்கள் கட்டுவதற்காக 11 லட்சத்துச் சொச்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் வாங்குவதற்காக நிர்ணயித்துள்ள தொகை நியாயமானது என்றும் குறிப்பிட்டிருக்கிருர். முக்கால்வாசி வேலைகள் முடிந்துவிட்டன. ஆகவே வெகு விரைவில் அந்த இடம் வாங்கப்பட்டு இருக்கிற இடம் மராமத்து செய்யப்பட்டு புதுக்கட்டிடமும் கட்ட ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாணவர்கள் விடுதிகளில் தங்க மிகவும் கஷ்டப்படுவதால் அடுத்த கல்வியாண்டிற்குள்ளாகவாவது இதை முடித்துவிடு வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பின்னுல் சில சங்கடங்கள் வரக்கூடாது என்பதற்காக வழக்குரைஞர்கள் சில விளக்கங்கள் கேட்டிருக் கிருர்கள். அது கிடைத்தவுடன் ஒரு திங்களுக்குள் இந்த இடத்தை வாங்கியாகி விடும். ஆகவே அடுத்த கல்வியாண்டிற்குள்ளாக அந்தக் கட்டிடத்தை பழுது பார்க்கிற வேலையும் முடிந்து மாணவர்களுக்கு ஓரளவு வசதி ஏற்பட்டுவிடும்.

Dr. H. V. HANDE : Sir, in view of the fact that this is a very old hostel—it was formerly the Madras Medical College Hostel and afterwards it became the hostel of the Law College and also that there is not enough accommodation—the Hon. Minister himself said that there was not sufficient accommodation and that it will take a long time to complete the work—may I know whether any temporary arrangements would be made to see that all students applying for accommodation in the hostel—now so many are rejected for want of accommodation—are provided with at least such temporary accommodation ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த இடத்தைத் தவிர வேறு வசதி இல்லை என்ற காரணத்தினால் அந்த இடத்தில் புதிய கட்டடத்தையும் கட்டலாம் என்ற அளவில் அந்த இடத்தை வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பிராட்வேயிலும் வேறு கட்டிடம் இருக்கிறது. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு வேண்டிய விடுதி வசதி நல்லமுறையில் சீக்கிரத்திலேயே அமைத்துக் கொடுக்கப்படும்.

Water supply in South Madras area

* 529. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Corporation of Madras had taken steps to increase the pressure of water supply to Kodambakkam, T. Nagar, West Mambalam, Saidapet, Guindy and Adyar by constructing a pump house at T. Nagar in Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சியின் தெற்குப் பகுதிகளில் தண்ணீர் விநியோகத்தைச் சீர்திருத்த தியாகராயநகரில் எழுபத்தெட்டு இலட்ச ரூபாய் செலவில் நீரைத் தேக்கி விரைவாக செலுத்த தனியாக ஒரு நிலையம் கட்டப்படுகிறது. கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திலிருந்து வடிகட்டிய நீர் பூமிக்கடியிலுள்ள தேக்கங்களுக்கு செலுத்தப்பட்டு, பின்பு ஒரு மேல்மட்ட தேக்கத்தின் வழியாக பல பகுதிகளுக்கு செல்லும் பெரிய குழாய்களுக்குச் செலுத்தப்படும்.

Dr. H. V. HANDE : May I know from the Hon. Minister when this is likely to be completed? May I also know whether the Government is aware of the fact that it is only a partially completed one now, it is very unhygenic and if it is allowed to